**வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் மே மாதம் 16.05.2023-ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள் விபரம் :**

**முன்னிலை : திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி**
**நகர்மன்ற தலைவர்**

பொருள் : 1

வால்பாறை நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான கோடை விழா வருகின்ற 26.05.2023, 27.05.2023 மற்றும் 28.05.2023 ஆகிய மூன்று தினங்களில் நடைபெற உள்ளதை குறித்து கோவை மாவட்ட ஆட்சியர், சார் ஆட்சியர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறிய அறிவுரையின் பேரில் கோடை விழா நடைபெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண். 1162/2022/இ1**

**நகர்மன்ற தீர்மான எண். 595 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 2

வால்பாறை நகராட்சி 2022-2023-ம் ஆண்டு 15 CFC UN Tied நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 03.05.2023-ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளி 08.05.2023-ம் தேதி திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வில்லோனி தார் சாலை கி.மீ- 0/0 முதல் கி.மீ 5/600 வரை தார் சாலை புதுப்பித்தல் பணி (Unicode 077005R04) (நீளம் 5600 மீட்டர் அகலம் 3.50 மீட்டர்). | 22200000 | 1. S.பார்த்திபராஜன்<br>2. R.சுப்புரமணியம் | 0.01 % ம.வி. குறைவு<br>6.00 % ம.வி. அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணியானது அரசின் திட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**கோப்பு எண் 684/2022/E1**

**நகர்மன்ற தீர்மான எண். 596 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 3

வால்பாறை நகராட்சி 2022-2023-ம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 03.05.2023-ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளி 08.05.2023-ம் தேதி திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பன்னிமேடு தார் சாலை கி.மீ- 4/600 முதல் கி.மீ 8/200 வரை தார் சாலை புதுப்பித்தல் பணி (Unicode 077018R24) (நீளம் 3600 மீட்டர் அகலம் 3.50 மீட்டர்). | 16100000 | 1. S.பார்த்திபராஜன்<br>2. R.சுப்புரமணியம் | 0.01 % ம.வி. குறைவு<br>6.74 % ம.வி. அதிகம் |

அலுவலக குறிப்பு

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையை விட 0.01 % குறைவாக வழங்கிய திரு. S.பார்த்திபராஜன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். கோப்பு எண் 684/2022/E1

1. மன்றம் ஏற்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 597 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 4

வால்பாறை நகராட்சி 2022-2023-ம் ஆண்டு SBM 2.0 நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 18.04.2023-ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளி 02.05.2023-ம் தேதி திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | Construction of 1 MLD STP Cum 10 KLD FSTP @ Compost yard in Valparai municipality | 97200000 | 1. MIY Constructions<br><br>2. Thirumala infra Projects Pvt Ltd | 0.01 % ம.வி. குறைவு<br><br>6.00 % ம.வி. அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணியானது அரசின் திட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**கோப்பு எண் 1157/2022/E1**

**நகர்மன்ற தீர்மான எண். 598 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 5

வால்பாறை நகராட்சி 2022-2023-ம் ஆண்டு 15 CFC Tied நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிக்கு 20.04.2023-ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளி 24.04.2023-ம் தேதி திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வால்பாறை நகராட்சிக்கு 4 எண்ணிக்கை LCV வாகனங்கள் (2 Cum) வாங்கி தருவித்தல் | 2920000 | 1. SDS Technologies | மதிப்பீட்டு விலை |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியானது அரசின் திட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**கோப்பு எண் 983/2022/E1**

**நகர்மன்ற தீர்மான எண். 599 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 6**

வால்பாறை நகராட்சி கீழ் பேருந்து நிலையம் அருகில் நகராட்சியால் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் தயார் நிலையில் உள்ள சமுதாய கூடத்திற்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக வால்பாறை நகராட்சி பகுதிகளில் உள்ள திருமண மண்டபங்கள் மற்றும் ஓட்டல்களில் உள்ள மனமகிழ் மன்றங்களின் ஒரு நாளைக்கு ஆகும் வாடகையின் அடிப்படையில் நமது நகராட்சி வசம் உள்ள சமுதாய கூடத்தினை பொதுமக்கள் நலன்கருதி பொதுமக்களின் காதுகுத்து விழா, திருமண நிகழ்ச்சிகள் மற்றும் பொதுமக்கள் நடந்தும் ஏனைய நிகழ்வுகளுக்கு ஒரு நாளைக்கு வாடகை ரூ.12000/- மட்டும் நிர்ணயம் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 600 அனுமதிக்கப்படுகிறது.**